மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.

அசல் வழக்கு எண். 296/2017

தேதி: 18.03.2022

பெயா்: ராஜாராமன் (DW-1)

**குறுக்கு விசாரணை**: 18.03.2022

சாட்சி அனுமதியின்போில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறாா்.

நான் இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதியா என்றால் எனக்கு படிக்கத்தொியாது. இந்த வழக்கில் பிரதிவாதியாக இருக்கிறேனா என்றால் ஆமாம். 1ம் பிதிவாதி கலியன் (எ) கலியமூா்த்தி எனது அண்ணன் என்றால் சாிதான். வாதி நாகராஜன் என்ன பாிகாரம்கோாி வழக்கு தாக்கல் செய்துள்ளாா் என்றால் நிலத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளாா். இந்த வழக்கு சொத்து சிவபுாி மடத்திற்கு சொந்தமானது என்றால் சாிதான். சிவபுாி மடத்திற்கு சொந்தமான சொத்துக்கள் ஆச்சாள்புரத்தில் சுமாா் 50 ஏக்கா் இருக்கும் என்றால் சாிதான். மடத்திற்கு சொந்தமான நிலம் கலியமூா்த்திக்கு எவ்வளவு இருக்கும் என்றால் சுமாா் 2-1/2 ஏக்கா் இருக்கும். சிவபுாி மடத்திற்கான நிலம் என் பெயாில் எவ்வளவு இருக்கும் என்றால் 5-1/2 மா நிலம் உள்ளது. வழக்கு சொத்து அய்யாறு படையாட்சியின் மாமனாா் மூா்த்திக்கு ஏதாவது உாிமை உண்டா என்றால் மூா்த்திக்கு உாிமை உண்டு அவா் இறந்துவிட்டாா் அவரது மனைவி கோவிந்தம்மாளுக்கும் உாிமை உண்டு. கோவிந்தம்மாள் பெயாில் குத்தகை உாிமை பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. குத்தகை உாிமை பத்திரம் எத்தனை

வருடத்திற்கு முன்பு ஏற்பட்டது என்றால் 40 வருடத்திற்கு முன்பு ஏற்பட்டது அதன் தேதி தொியுமா என்றால் தொியாது. கோவிந்தம்மாள் பெயாில் உள்ள குத்தகை உாிமை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மூா்த்திக்கு இரண்டு மகள்களா என்றால் மூன்று மகள்கள். மூா்த்தியின் மூன்று மகள்களில் இரண்டு மகள்களை அய்யாறு படையாட்சிக்கு திருமணம் செய்து வைத்தாா்கள் என்றால் சாிதான். மூா்த்தி இரண்டு மகள்களை அய்யாறு படையாட்சிக்கு திருமணம் செய்து கொடுத்த பிறகு இரண்டு மகள்களுக்கும் சொத்துக்களை பிாித்துக்கொடுத்துள்ளாா் என்றால் சாிதான். அவ்வாறு மூா்த்தி இரண்டு மகள்களுக்கு பாகம் பிாித்துக்கொடுத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்து அய்யாறு படையாட்சியின் பெயாில் குத்தகை உாிமை பதிவு உள்ளதாக கூறும் நான் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மூா்த்தி எந்த வருடம் இறந்தாா் என்றும் சுமாா் எத்தனை வருடங்களுக்கு முன்பு இறந்தாா் என்றும் எனக்கு தொியுமா என்றால் எனக்கு தொியாது. அய்யாறு படையாட்சி எப்போது இறந்தாா் என்று எனக்கு தொியுமா என்றால் அவா் இறந்தது 15 வருடத்திற்குள்தான் இருக்கும். சிவபுாி மடத்திலிருந்து வழக்குச்சொத்தைப் பொறுத்து என் பெயாில் குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்தாா்களா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. குத்தகை சீட்டுதான் கொடுப்பாா்கள். எனக்கு அய்யாறு படையாட்சியோ, கோவிந்தம்மாளோ எனக்கு

ஏதாவது பத்திரம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் கோவிந்தம்மாள், அய்யாறு படையாட்சி மற்றும் அய்யாறு படையாட்சியின் மற்றொரு மனைவி அம்சவள்ளி ஆகியோர் எனக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். அய்யாறு படையாட்சி கோவிந்தம்மாள் இறந்த பிறகு அம்சவள்ளியை திருமணம் செய்துக்கொண்டாரா என்றால் கோவிந்தம்மாள் உயிருடன் இருக்கும்போதே அம்சவள்ளியை அய்யாறு படையாட்சி திருமணம் செய்துக்கொண்டார். எந்த வருடம் எனக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் 40 வருடத்திற்கு முன்பு எழுதிக்கொடுத்தார்கள். தேதி , வருடம் தெரியுமா என்றால் தெரியாது. அது எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பத்திரத்தை படித்து பார்த்தால்தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் சர்வே எண் ஆவண தேதிக்கு பின்னிட்டு புதிய மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிக்கத்தெரியாது. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் அய்யாறு படையாட்சியின் கையெழுத்தும், கோவிந்தம்மாள் மற்றும் அம்சவள்ளியின் கைரேகையும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த பத்திரம் யார் பெயருக்கு வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் என் அப்பா பெயரில் வாங்கப்பட்டது என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.12 ஆவணம் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டதால்தான் ரேகை தெரியாமல் மையினால் முழுவதும்

நிரப்பப்பட்டுள்ளது என்றால் சாியல்ல. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தின்படி ஆர்.டி.ஆர் பதிவை என்பெயாில் மாற்றிக்கொண்டேனா என்றால் மாற்றிக்கொள்ளவில்லை. மாற்றி தருவதாக கூறினார்கள். அவ்வாறு ஆர்.டி.ஆர் பதிவை மாற்றிக்கொடுக்கவேண்டும் என்று அய்யாறு படையாட்சி வகையறாவுக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.12 பத்திரத்தில் சொத்திற்குண்டான நான்கெல்லை விவரம் தொியுமா என்றால் தொியும். கிழக்கில் கலியமூர்த்தி நிலம், மேற்கே யாருடைய நிலம் போடப்பட்டுள்ளது என்றால் ராஜாராமன் பங்கும் கலியமூர்த்தி பங்கும் போடப்பட்டுள்ளது. தெற்கே என்ன போடப்பட்டுள்ளது என்றால் தொியவில்லை எனக்கு படிக்கத்தொியாது. வடக்கே என்ன போடப்பட்டுள்ளது என்றால் தொியாது. வழக்குச்சொத்தில் எனக்கு உாிமை இல்லாத காரணத்தால்தான் 35 வருடமாக ஆர்.டி.ஆர் பதிவை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் சாியல்ல. வழக்கு தாக்கல் செய்துள்ள வழக்குச்சொத்தின் சர்வே எண் தொியுமா என்றால் சர்வே எண்.40. சர்வே எண்.40-ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தொியுமா என்றால் தொியாது. சிவபுாி மடத்தின் எஸ்டேட்டின் வாாிசு இந்திராணி இறந்து எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் சுமார் 5,6 வருடங்கள் இருக்கும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் இந்திராணி எழுதிக்கொடுக்கவில்லை என்றால் எனக்கு படிக்கத்தொியாது. இந்திராணி எனக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான் நான்

நிரூபணவாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று தொியாமல் கைரேகை செய்துள்ளேன் என்றால் எனக்கு படிக்கத்தொியாது. நிரூபணவாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தொியாது என்றால் சாிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் 17.04.2018 ல் ஏற்பட்டது என்றால் எனக்கு தேதி பாா்க்க தொியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த தேதிக்கு பின்னிட்டு வழக்கிற்காக பொய்யாக தயாாிக்கப்பட்ட ஆவணம் என்றால் சாியல்ல. பி.வா.சா.ஆ.1 குத்தகை ஆவணத்தை யாா் யாருக்கு எழுதிக்கொடுத்தாா்கள் என்ற விவரமும் எனக்கு தொியாது என்றால் சாிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் யாா் யாா் சாட்சி கையொப்பம் செய்துள்ளாா்கள் என்ற விவரமும் எனக்கு தொியாது என்றால் சாிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் கையால் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்ற விவரமும் எனக்கு தொியாது என்றால் சாிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 குத்தகை ரசீதில் எவ்வளவு நெல் குத்தகை என்றோ எவ்வளவு பணம் குத்தகைக்கு பெறப்பட்டதோ என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடுவாா்கள். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் ராஜாராமன் 2011ம்வருடம் நிலத்தை அளக்கவில்லை என்றும் மீதி வருடங்களில் நெல் முதலாளி ஆகிய எனக்கு அளந்துள்ளாா் என்று ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் பாக்கி வைக்கவில்லை. சா்வே எண்.40-ல் எனக்கு 5-1/2 மா நிலம் மட்டும்தான் உள்ளது என்றால் சாிதான். சா்வே எண்.40-ல் கலியமூா்த்திக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை. ஒரு மா நிலத்திற்கு எவ்வளவு குத்தகை என்றால் மாவுக்கு இரண்டு அல்லது மூன்று கலம் அவ்வப்பபோது

சூழ்நிலையை கருத்தில்கொண்டு வருடத்திற்கு ஒரு முறை தீர்மானம் செய்வார்கள். சர்வே எண்.40-ல் 7 மா என் பெயரில் உள்ளது என்று சொன்னால் பொய் என்றால் என் பெயரில் 5-1/2 மா தான் உள்ளது. சர்வே எண் 40-ல் என் பெயரில் 7 மா குத்தகை நிலம் உள்ளதா என்றால் என் பெயரில் 5-1/2 மா நிலம்தான் உள்ளது. ரூ.4,000/- குத்தகை தொகை என்பது எத்தனை கலத்திற்கான

குத்தகை தொகை என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த தேதிக்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். ரூ.12,000/- குத்தகை தொகை என்பது எத்தனை கலத்திற்கான குத்தகை தொகை என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் ஆச்சாள்புரம் விவசாய கூட்டுறவு சங்கத்தில் வழங்கப்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான். அதுவும் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் வந்து வழக்கு சொத்தை அளந்தார்களா என்றால் அளந்திருக்கலாம். அவ்வாறு அளந்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றும்அளக்கும்போது நான் ஸ்தலத்தில் இருந்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தை ஆணையர் மற்றும் சர்வேயர் அளக்கும்போது நானும் 1ம் பிரதிவாதியும் ஸ்தலத்தில் இருந்தோம் என்றும் தற்போது வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆணயைர் மற்றும் சர்வேயர் தாக்கல் செய்த அறிக்கை, வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை மனு தாக்கல்

செய்துள்ளேனா என்றால் எனக்கு தொியாது. எனது மகனுக்குதான் தொியும். நான் வழக்குச்சொத்தில் 2014ம் வருடம் ஆக்கிரமிப்பு செய்தேன் என்றும் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்த நிலத்தை வாதியிடம் நான் திருப்பி கொடுக்க கடமைபட்டவா் என்றால் சாியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் அனைத்தும் வழக்குச்சொத்திற்கு சம்மந்தமில்லாத வேறு நிலத்திற்குண்டான ரசீதுகள் என்றால் சாியல்ல. வழக்குச்சொத்தில் 5-1/2 மா நிலம் எனது சாகுபடியில் உள்ளது என்பதை சிவபுாி மடத்திலிருந்து சாட்சி சொல்ல வருவாா்களா என்றால் வருவாா்கள். சிவபுாி மடத்தில் எஸ்டேட் வாாிசாக தற்போது யாா் உள்ளாா் என்று எனக்கு தொியுமா என்றால் பெயா் ஞாபகம் இல்லை. வழக்கில் வாதிகோாியபடி தீா்ப்பாகவேண்டும் என்றும் வழக்குச்சொத்தை வாதியிடமிருந்து நான் அபகாித்து வைத்துக்கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. சா்வே எண்.40-ல் 2.46 ஏக்கருக்கு வாதி நாகராஜன் பெயாில் ஆா்.டி.ஆா். பதிவு உள்ளதாக அதற்கான ஆவணங்களை வாதி தாக்கல் செய்துள்ளாா் என்றால் அந்த ஆவணங்களை வாதியே தயாா் செய்து உள்ளாா்.

**மறுவிசாரணை**: இல்லை.